புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பெண்ணிய நோக்கில் சு.வேணுகோபாலின் படைப்புகள்

இரா.கலைச்செல்வி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

முனைவர் து.ரேணுகாதேவி
நெறியாளர் உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

ஆய்வுச்சுருக்கம்

உலகில் ஆணும் பெண்ணும் சமம் என்று கூறுவர். ஆனால் அவ்வாறு நடப்பதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பாரதியார், பாரதிதாசன் பெண் விடுதலைக்காகப் பாடியிருந்தாலும், இன்னும் பெண்ணிற்கு விடுதலை என்பது கிடைக்கப்படவில்லை என்றே கூறலாம். ஒரு பெண்ணிற்கு ஏற்படும் அவல நிலைகள் அதிகம். ஆனால் ஒரு பெண்ணின் அயராத உழைப்பும் செயலும் துணிச்சலும் தன்னம்பிக்கையும் தனித்துவமானது. அதற்கு இந்த சமூகம் இன்றும் எதிராகதான் உள்ளது. ஒரு பெண் வேலைக்குச் சென்றால் அங்கு பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறாள், பணிச்சுமைக்கு அடிமையாகியும் விடுகிறாள். இதுவே பெண்களுக்கு நேரும் இடர்பாடுகள். சில சமயம், தனது வீட்டில் கணவனாலும், மாமியராலும் துன்புறுத்தலுக்கு உள்ளாகியும் விடுகிறாள். இதுபோன்ற நிகழ்வுகளை எல்லாம் ஒரு படைப்பாசிரியர் தமது கதைகளில் படைத்திருப்பர். அந்தவகையில் சு.வேணுகோபால் எனும் எழுத்தாளர் பெண்களுக்கு நேரும் துன்பங்களையும், சிக்கல்களையும், ஆளுமைகளையும் தமது கதைகளில் சுட்டிக்காட்டியுள்ளதை இக்கட்டுரையின் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது.

ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வில் பெண்ணியம் பற்றி ஆராய்வதால் பெண்ணியத் திறனாய்வும், அதனை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறைத் திறனாய்வும் பின்பற்றப்பட்டுள்ளது.

## முன்னுரை

பெண்ணின் முன்னேற்றத்திகாகத் தோற்றுவிக்கப்பட்டதே பெண்ணியத்துறை. இத்துறையின் மூலம் பெண்கள் வாழ்வியல், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் இருந்து வளர்ச்சிப் பெறுகின்றனர். அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் பெண்கள் சில சமயங்களில் பல இன்னல்களுக்கும் உள்ளாகிவிடுகின்றனர். அதனை எதிர்கொள்ளவே தொடங்கப்பட்டத் துறை பெண்ணியமாகும். பெண்ணியம் குறித்து பல படைப்பாளர்கள் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டுதான் வருகின்றனர். அதனை இச்சமூகம் ஏற்க மறுக்கின்றனர். இன்றும் ஒரு பெண் தனது சமூகத்தில் தனித்து செயல்படவும், சுயமரியாதை மேற்கொள்ளவும் முடியாத நிலையில்தான் உள்ளாள். அதனை எல்லாம் எதிர்த்துதான் சில படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளின்வழி கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வருகின்றனர். சு.வேணுகோபால் எனும் ஆசிரியர் தங்கள் படைப்புகளில் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை அதிகம் முன்வைத்தே எழுதியுள்ளார். அக்கருத்துக்களை இன்றைய சமூகத்திற்கு வெளிக்கொணரவே இக்கட்டுரையானது அமைகிறது.

*பெண்ணியம்*

*பெண்ணியம் என்பதற்கு பல அறிஞர்கள் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். முதலில் 'Feminism' என்ற ஆங்கிலச் சொல் Femina என்ற இலத்தீன் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். இச்சொல் பெண்ணியத்தின் உரிமைகளை எடுத்துக்கூற கையாளப்பட்டது எனலாம். "ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் சொல் தமிழில் பெண்ணியம் என்றும் இது 1980களில் பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெற செயல்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது"[1] என்று முத்துச்சிதம்பரம் கூறுகின்றார். "பெண்ணியம் மூலம் உலகளவில் அரசியலிலும், பயன்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்"[2] என்று பிரேமா அவர்கள் கூறுகின்றார். "பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி பெண்மை, அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டு இருப்பினும் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பதே நம் இலட்சியம்"[3] என சாலமன் பெண்கள் பற்றி பேசுகின்றார்.*

*ஆகவே பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்றிப் பெண்கள் வாழ்வியல், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றின் மாற்றத்திற்காகக் குரல் கொடுக்கும் இயக்கம் என்று கூறலாம். பெண்ணியம் குறித்து பல எழுத்தாளர் தங்களின் படைப்புகளின் வழி தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் சு.வேணுகோபாலின் படைப்புகளில் பெண்ணிய ஆளுமைகள், சிந்தனைகள், சிக்கல்கள், அதற்கான தீர்வுகள் ஆகியவற்றைப் பற்றி ஆராயப்படுகின்றன.*

*பெண்ணிய ஆளுமை*

*கருவிலிருக்கும் போதே பெண் குழந்தைகளுக்குப் பிரச்சினையானது ஆரம்பமாகிவிடுகின்றன. குடும்பத்தில் பணியிடத்தில், பொதுவெளியில் பெண்ணுக்கானப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் அதிகம் காணப்படுகின்றன. அதனை எதிர்த்துப் போராடக்கூடிய துணிவினைப் பெற்றவளாகப் பெண் படைக்கப்படுமிடத்து அவள் புரட்சியும் எழுச்சியும் புதியதொரு புதுமைப் பெண்ணாக வடிவெடுக்கிறாள். இத்தகைய மனித வாழ்வியலில் செல்வி என்ற பெண்ணானவள் துணிச்சலும் வீரமும் அன்பும் கொண்டவளாக சு.வேணுகோபால் தாயுமானவள் எனும் சிறுகதையில் படைத்துள்ளார்.*

*செல்வியின் இளவயதிலேயே அவளின் தாய் அவர்களை விட்டு ஓடிவிடுகிறாள். தன் தம்பி, தங்கை. தந்தை ஆகிய மூவரையும் தாய்போன்று பாதுகாத்து வருகிறாள். தந்தையோடு சேர்ந்து வயல்வெளிகளில் வேலைக்குச் செல்கிறாள். பின் கால்நடைகளை வளர்த்து அதற்குரிய பணிவிடைகளையும் செய்கிறாள். தங்கை, தம்பியைப் பள்ளிக்கு அனுப்பி பயிலவும் செய்கிறாள். "அது பி.பி.ஏ படிக்கிற பிள்ளைதானா?, புல்லறுத்துக்கிட்டிருக்கு"4 என்று அருகில் இருப்பவர்கள் வியக்கும் அளவிற்கு விரைவாக அனைத்து வேலைகளையும் செய்து முடிகிறாள். பின் அவளும் கல்லூரிக்குச் செல்கிறாள். கல்லூரி வாழ்க்கையில் நிகழும் சிறு மகிழ்ச்சியைக் கூட அவள் விரும்பாமல் குடும்பத்தைத் தாங்கும் தூணாக இருந்து, அடுத்தடுத்த இலக்கை நோக்கி நகரும் ஆளுமைமிக்கப் பெண்ணாகத் திகழ்கிறாள்.*

*இக்கதையின் மூலம் அவளின் ஆளுமைப்பண்பு போற்றக்கூடியது. மேலும், தந்தை, தம்பி, தங்கை மூவரையும் அவள் தாய்போல் பேணிக்காப்பதனால் ஆசிரியர் இக்கதைக்குத் தாயுமானவள் என்று பெயரிட்டிருக்கலாம் என்று அறிய முடிகிறது. மேலும், செல்வி போன்று எல்லாப் பெண்களும் ஆளுமையோடு நடந்துகொண்டால் வாழ்வில் எந்தவொரு கடினம் வந்தாலும், மன உறுதியாக நின்று கரையேறலாம் என்ற கருத்தை முன் வைத்தே இக்கதையானது அமைந்துள்ளது என்பதை உணர முடிகிறது.*

*இல்லறத்தில் பெண்கள் நிலை*

*குடும்பப் பெண்கள் இயந்திரம் போல் உழைக்கின்றனர் என்று கூறுவர். பெண் குடும்பத்தில் மகளாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக இருந்து பல்வேறு பொறுப்புகளைச் சுமக்கிறாள். அந்தவகையில் இல்லறத்தில் பெண்ணின் நிலையாக "கிடந்தகோலம்" எனும் சிறுகதையில் கணவன் எந்த வேலைக்கும் செல்லாதவனாக இருக்கிறான். மனைவி வனிதாவோ வீட்டு வேலைகளைச் செய்வது, குழந்தைகளை கவனிப்பது, பள்ளிக்கு அனுப்புவது, வீட்டை சுத்தம் செய்வது, கடைக்குச சென்று வருவது, தண்ணீர் எடுப்பது மற்றும் பள்ளியில் ஆசிரியர்*

பணியாற்றும் வரை தனியாளாகவே நின்று செயல்படுவது என பல கோணங்களில் வனிதா என்ற கதாபாத்திரத்தை ஆசிரியர் படைத்துள்ளார். தன் கணவன் எதையும் அறியாதவன் போல் உலா வருவது, உண்பது, தொலைக்காட்சி பார்ப்பது, நண்பர்களுடன் அரட்டையடிப்பது, உறங்குவது என அவன் பொழுதை தினம் தினம் கழித்து வருகிறான். தன் குழந்தைகளைக் கூட பார்த்துக் கொள்ளாதவனாக இருக்கிறான். இவையனைத்தும் வனிதாவிற்கு மிகவும் வருத்தத்தை அளித்தது. அவரிடம் எதாவது உதவிக் கேட்டால், ''உன் மனசில என்னடி நெனச்சிட்டிருக்க இந்த ஊர்ல எனக்கு எவனடி தெரியும்? எந்தக் கடைக்காரன்கிட்ட நான் வாங்கியிருக்கிறேன்!, நீ செஞ்சா செய்யி, இல்லாட்டி சும்மா கிட. என்னை தொந்தரவு செய்யாத''5 என்று கோபம் கொண்டு அவளை அடித்து கொடுமைப்படுத்தும் நிகழ்வே நடந்தது.

குழந்தைகளை நினைத்தும் அப்பா, அம்மாவை நினைத்தும், உடன் பணியாற்றுபவர்கள் தன்னைத் தவறாக நினைத்துவிடக்கூடாது என்று நினைத்து பெண்கள் சில இடர்பாடுகளை வெளியே சொல்லாமல் இருக்கின்றனர். இந்த நோக்கத்தை மையப்படுத்தியே ஆசிரியர் ''கிடந்தகோலம்'' என்ற சிறுகதையில் வனிதா என்ற கதாபாத்திரத்தைப் படைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

### பணியிடத்தில் பாலியல் வன்முறை

நாட்டில் ஆங்காங்கே பெண்களுக்கு நேரும் முக்கிய பிரச்சினையாகப் பாலியல் வன்கொடுமை நடந்த வண்ணம்தான் உள்ளது. இது சட்டத்திற்குப் புறமானதாகவும், பெண்கள் சுதந்திரத்திற்கு எதிராகவும் உள்ளது. பெரும்பாலும் பெண்களுக்கு வேலை செய்யும் இடங்களில் பாலியல் துன்புறுத்தல் என்பது நிகழ்கிறது. ஆனால் அவர்கள் அதனை வெளியே சொல்லாமல் மனதிலுள்ளே புதைத்துவிடுகிறார்கள். ''பட்டம்மா'' என்ற சிறுகதையில் பட்டம்மா என்ற பெண்ணிற்கு பணியிடத்திலேயே பாலியல் துன்புறுத்தல் நடக்கிறது. அந்த நிலையை வெளியே சொல்ல முடியாத சூழலில் தவிப்பதாக ஆசிரியர் கூறுகிறார். சில நேரங்களில் தனக்கு நிகழ்ந்த தவறை தன் குடும்ப உறுப்பினர்களிடமும், நண்பர்களிடம் சொல்கிறாள். அவர்களோ,

''அவங்க அப்பாகிட்ட சொல்லித்தட்டி வைக்கச் சொல்வோம். நாம இருக்கிறது பத்துக் குடும்பம். அந்த ஜாதியாரெல்லாம் ஒன்று சேர்ந்துக்கிட்டா அண்டிப்பிழைக்கக் கூட முடியாது. கலவரம் வந்தா முட்டி நிக்க யார் இருக்கா? ஏற்கனவே நாடெல்லாம் பிரச்சினையாக் கெடக்கு. ஆபீஸில் கேஸ் கொடுக்க வேணாமன்னு சொல்லிடு....''6 என்று அவளிடம் கூறினர். கணவரிடம் சொல்கிறாள், அவரும் அதை விட்டுவிடு என்கிறார். மறுபடியும் உடல் நடுங்கி மீண்டும் பணிக்குச் செல்பவளாக ஆசிரியர் காட்டுகிறார். பெண்களை நுகர்பொருளாகப் பார்க்கும் பார்வையிலிருந்து என்று மீளுமோ அன்றுதான் இச்சமூகமானது உயரும் என்று கருத்து முன் வைக்கப்படுகிறது.

### தொழில் ரீதியான வேதனை

தொழிலை வைத்து சமுதாயத்தில் உயர்வு தாழ்வு பார்ப்பது என்பது மிகவும் வேதனையளிப்பதாக உள்ளது. ''சிதைந்த நெஞ்சு'' எனும் சிறுகதையில் குடும்ப வறுமையின் காரணமாக பணியை சுமந்து வாழும் பெண்ணின் நிலையைப் பற்றி எடுத்துரைக்கிறது. செங்கல் அறுக்கும் தொழில் செய்யும் பணியாளர்கள். பணியில் பல இன்னல்களை அடைவதும், உடல் நிலை பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலும் கல் அறுக்கச் செல்வதும் ஆரோக்கியத்தின் அவலநிலைகளையும் அதனை உணராமல் ஊர்மக்கள் இகழ்வதும் தெளிவாக சுட்டுகிறார் ஆசிரியர். தனது பணியினை ஈடுசெய்ய தோழிப் பார்வதியை நாடுவதாக அமைகிறது. ''ருக்கு வண்டி வந்திருச்சு. வேகமா கட்டளைப் போட்டு வாங்க. இப்பிடி அசமந்து வேலசெஞ்சா ஒரு நாளைக்கு முப்பது கட்டளை கூடப் போடமாட்டீங்க''7 என காளவாசல் ரத்ன மாமா சத்தம் கொடுத்தார். பின் வேகவேகமா ஈரமண் போட்டு அறுத்தார்கள். குடும்ப வறுமையின் காரணமாகப் பொருளாதாரத்தை சீராக்க வேண்டி பங்குனி மாத வெயிலில் முகத்தில் நீரினை அடித்துக்கொண்டு உடலில் இருந்த அசதியை நீக்கி வேலையைத் தொடர்ந்தவாறே காணப்படுகின்றனர். ''ஏய் கழுத அங்கெதுக்குப் போயி பதுங்குற. தின்னுட்டு வேலையப் பாரு. பூரம் மேனாமினுக்கிகளா வந்துக்கிட்டு உசுர வாங்குதுக. சொல்றது காதில விழலையா? பாவல் பண்றதில் கொறைச்சல் இல்ல....''8 என்று சத்தமிடுவது காதில் ஒலித்தது.

இதையறிந்த ருக்குவும், பார்வதியும் இல்ல மாமா மயக்கமா வருவது என் உடல் சோர்வாக உள்ளது என்ற வார்த்தையைக் கூற நினைக்கிறார்கள். வார்த்தை தடுமாறி தொண்டைய விட்டு ஏறிவர மறுத்தது. இந்தளவில் இவர்களின் வேலைச்சுமை என்பது அமைகின்றது. அச்சூழலில் ருக்கு, பார்வதி அனுபவிக்கும் பணிசுமைகளை நினைத்து துன்புறும் மனவேதனைகளும் பெண்கள் எதிர்கொள்ளும் அவல நிலைகளை படம்பிடித்து காட்டியிருப்பதை உணர முடிகிறது.

பெண்ணடிமை

பெண் என்பவள் குழந்தைப் பெறுவதற்கு மட்டுமல்ல. குடும்பத்தின் விளக்கு ஆவாள். ஆனால் அவளை ஏளனமாக இச்சமூகம் நடத்துகிறது. பெண்களை அடிமையாக நடத்தினால், அந்த நாடு முன்னேறாது என்பதைப் பாரதிதாசன்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல்முயற் கொம்பே
ஊமை என்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவருக்கு உண்டு"

என்ற பாடலின் வழி பாரதிதாசன் பெண்ணடிமையை கூறியுள்ளது நன்கு புலனாகிறது. இவ்வகையில் "பதிலடி" எனும் சிறுகதையில் ஆண்கள் பெண்களை அடிமையாக நடத்தும் நிகழ்வை எடுத்துரைக்கின்றார்.

"ஏன்டா வெண்ணை, இப்படி பயந்து பயந்து சாகுற. நீ இப்படி பதுங்கிப் பதுங்கிப் போய்தாண்டா குடும்பத்தயே கெடுத்துக்கிட்ட வப்பனக்கெ மொதலிருந்தே நாலு சாத்து சாத்தி வந்திருந்தியன்னா இப்படி நடக்குமா"9 என்று பெண்ணை அடிமையாக நடத்த வேண்டி தன் நண்பன் சரவணன் எடுத்துரைக்கிறான். அவ்வகையில் ஆணாதிக்க சமுதாயம் ஆண் என்ற அகந்தையில் பெண்ணை அடிமையாக்கி வாழ நினைக்கின்றது. இறுதியில் மனைவியின் பதிலடியால் மணிமாறன் மனைவியை இழந்து இரண்டு பிள்ளைகளை வைத்துக் கொண்டு தவித்து நிற்கும் சூழல் ஏற்படுகின்றது என்பதை உணர்த்தியுள்ளார். ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என்பதை உணராத ஆணாதிக்கச் சமுதாயம் இருக்கும் வரை பெண்ணடிமை என்ற நிலைமாறாது. பல துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும் முன்னேற்றம் அடைந்தாலும் ஆண்களிடம் பெண்கள் அடிமையாக வாழ்ந்து வருவதை அறியமுடிகின்றது.

மணக்கொடை

மணக்கொடை வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என்று சட்டங்கள் இருந்தாலும், மணக்கொடை பெறப்படுவதும், கொடுக்கப்படுவதும் அனைத்துக் காலக்கட்டத்திலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அத்தகைய மணக்கொடை பற்றிக் கூறும்போது பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணின் திருமணத்தின்போது கணவன் கைவிட நேர்ந்தால் அவளைப் பாதுகாக்க ஒரு தொகையை கொடுக்கின்றனர். இதுவே "சுல்கம்" என்று கூறப்பட்டது. இது பிற்காலத்தில் வரதட்சனையாக வளர்ந்தது.

பண்டைய தமிழர் காலத்தில் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டில் அவர்களுக்கு ஏற்றாற்போல் பொன்னும் பொருளும் கொடுத்து, அப்பெண்ணை மணந்து வருவார்கள். சான்றாக முல்லைக்கலியில் தலைவி, தன் தலைவனிடம் என் வீட்டில் முறை வைப்பதற்கு நீங்கள் எவ்வளவு செல்வந்தர் என்று கேட்பாள். இதனை இங்கு சுட்டிக்காட்டி முடிகிறது. பிற்காலத்தில் இம்முறையானது மாறி, மணப்பெண் வீட்டிலே பொன்னும் பொருளும் கேட்டு, அப்பெண்ணை மணந்து வருகின்றனர். இம்முறை நம் தமிழர் திருமண முறைக்கு உகந்ததல்ல என்று உணர்த்த முடிகிறது.

முடிவுரை

உலகில் பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகின்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் அந்த நிலைக்கு அவர்கள் செல்ல படும் துயரங்கள் அதிகம் என்று கூறலாம். ஒரு பெண் ஆளுமைமிக்கவளாக இருக்கலாம். ஒரு பெண் குடும்பத்தை ஏற்று நடத்தும் மனைவிளக்காக இருக்கலாம். இதனைப் பார்க்கும் போது பெண்ணின் வளர்ச்சி நிலைகளை அறிய முடிகிறது. ஒரு சில சமயங்களில் பெண்ணிற்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்,

பணிச்சுமை மற்றும் பெண்ணடிமை என இவைகளில் இருந்து பெண்ணிற்கு இன்னும் விடுதலை கிடைக்கப்படவில்லை என்பதை ஆசிரியர் சு.வேணுகோபாலன் அவர்கள் படைப்புகளின்வழி உணர்த்துவதை அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. ச.முத்துச்சிதம்பரம், பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும், ப.09
2. இரா.பிரேமா, பெண்ணியம், ப.13
3. சித்து மா.சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், பக்.13-14
4. சு.வேணுகோபால், தாயுமானவள் – சிறுகதை, ப.35
5. சு.வேணுகோபால், வெண்ணிலை – கிடந்தகோலம் – சிறுகதை, ப.75
6. சு.வேணுகோபால், பூமிக்குள் ஓடுகிறது நதி – பட்டம்மா - சிறுகதை, ப.85
7. சு.வேணுகோபால், பூமிக்குள் ஓடுகிறது நதி – சிதைந்த நெஞ்சு - சிறுகதை, ப.74
8. சு.வேணுகோபால், பூமிக்குள் ஓடுகிறது நதி – சிதைந்த நெஞ்சு – சிறுகதை, ப.79
9. சு.வேணுகோபால், களவுபோகும் புரவிகள் - பதிலடி – சிறுகதை, ப.63

துணை நூற்பட்டியல்


1. சித்து மா.சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், கிரியேட் 9 வது தெரு பெரியசாமி நகர், அவனியாபுரம், மதுரை முதற்பதிப்பு 1997.
2. பிரேமா. இரா., பெண்ணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 2004.
3. முத்துச்சிதம்பரம் ச., பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், முத்து பதிப்பகம், திருநெல்வேலி, ஐந்தாம் பதிப்பு 2005.
4. வேணுகோபால் சு., தாயுமானவள் சிறுகதை, மணி ஆப்செட், தமிழினி பதிப்பகம், சேலவாயல், சென்னை 51, முதற்பதிப்பு ஜனவரி 2020.
5. வேணுகோபால் சு., வெண்ணிலை சிறுகதை, மணி ஆப்செட், தமிழினி பதிப்பகம், சேலவயால், சென்னை 51, இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2012.
6. வேணுகோபால் சு., பூமிக்குள் ஓடுகிறது நதி சிறுகதை, ஆர்.கே.பிரிணடர்ஸ் சேலவாயல், சென்னை 51, இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2014.
7. வேணுகோபால் சு., பூமிக்குள் ஓடுகிறது நதி சிறுகதை, பாவை பிரிணடர்ஸ் சேலவாயல், சென்னை 51, இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2012.


********* ********* ********** ********* ********* ********** ********** **********